தீக்கதிர்

13-11-2024

## மாற்று ஏற்பாடு இல்லாமல் நீர்நிலைப் பகுதி ஆக்கிரமிப்பு என்று அகற்றுவதா?

# முல்லை நகரில் 2 ஆது நாளாக தொடரும் காத்திருப்புப் போராட்டம்

மதுரை, நவ.12-

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி வார்டு எண்கள் 16, 25 இல் சர்வே எண்: 23/24-ல் அடங்கியுள்ள பகுதிகளான பி.பீ.குளம் முல்லை நகர், முன்னாள் ராணுவத்தினர் குடியிருப்பு, நேதாஜி மெயின்ரோடு, ராஜீவ்காந்தி நகர், நேருஜி தெரு, கலைஞர் கருணாநிதி தெரு ஆகிய பகுதிகளில் மொத்தம் 592 வீடுகளில் சுமார் 1,500 குடும்பங்கள் 55 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்றனர்.

இதில் ஒரு பகுதியில் குடிசை மாற்று வாரியத்தில் சுமார் 120க்கும் மேலானோர் பணம் கட்டி அதற்கான தடையின்மை சான்றிதழும் பெற்றுள்ளனர். மேலும் மதுரை மாநகராட்சியில் வீட்டுவரி, குடிநீர் வரி, பாதாளச் சாக்கடை வரி, சாலைவரி, மின்இணைப்பு பெற்று இந்த நடப்பு ஆண்டு வரை மாநகராட்சிக்கு வரி செலுத்தியுள்ளனர்.

இதனை அடிப்படையாக கொண்டு அனைவருக்கும் இலவச வீடு திட்டம், அரசு உதவித் தொகையை பெற்று அதனுடன் வங்கியிலும் கடன் பெற்று வீடுகளை கட்டி, இந்நாள் வரை குடியிருந்து வருகின்றனர். இப்பகுதியில் உள்ள மக்கள் தங்களுடைய மொத்த வாழ்வாதாரம் பகுதியை ஒட்டியே உள்ள நிலையில், கடந்த 10 நாட்களுக்கு முன் மதுரை மாவட்டத்தில் பெய்த கனமழையில் இப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் மழை நீர் தேங்கியது. 2 நாட்களில் மழைநீர் வடிந்து இப்பகுதி மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்.



கடந்த 35 வருடங்களில் எந்தவொரு வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டதில்லை. ஆனால் இப்பொழுது சிறிய மழையை கருத்தில் கொண்டு இந்த 35 வருடங்களில் இல்லாமல் இதனை நீர்நிலை பகுதி எனக் கூறி உயர்நீதிமன்ற உத்தரவின் பெயரில் தண்ணீர் வரத்தே இல்லாத கண்மாயை சீர் செய்வதாகக் கூறி இப்பகுதியில் உள்ள குடியிருப்புகளை அப்புறப்படுத்த நினைக்கின்றனர்.

அதன் அடிப்படையில் 592 வீடுகளுக்கும் எந்தவொரு மறு ஏற்பாடோ, நிவாரணங்களோ செய்யாமல் நவம்பர் 11 திங்கட்கிழமை வீடுகளை அகற்றுவதற்கான நோட்டிசை நவம்பர் 7 வியாழக்கிழமை நீர்வளத்துறை ஒட்டியுள்ளது. இதனால் அனைவரும் மிக மோசமான அவல நிலைக்கு உள்ளாகியுள்ளோம். எனவே நீர்வழித்தடத்தில் மட்டும் வாய்க்கால் அமைத்து மீதமுள்ள பகுதியில் நாங்கள் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியிருக்கவும் எங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் மனு ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு அவருடைய அலைபேசி எண்ணுக்கு இங்கிருக்கும் குடியிருப்போர் நல சங்கங்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் குடியிருப்போர் நலச் சங்கம் சார்பில் 5 ஆண்டுகளுக்கு முன் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை முல்லை நகர் பகுதியில் வாய்க்கால் ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ளவர்களுக்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவில் இடம் கொடுத்து குடியமர்த்த வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்த நிலையில் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்காமல், மதுரையில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ராஜாக்கூர் பகுதியில் அரசு கட்டியுள்ள அடுக்குமாடி குடியிருப்பிற்கு செல்ல மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறது. அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்காமல் அங்கு குடியேறச் சொன்னால் எப்படி செல்வது? மேலும் வாய்க்காலுக்கு தேவையான இடத்தை அரசு எடுத்துக் கொள்ளட்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் மதுரையில் பல்வேறு அரசு நிறுவனங்கள் கண்மாய் ஆக்கிரமிப்பு பகுதிகள் உள்ள நிலையில் குறிப்பிட்டு முல்லை நகர் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று அரசு எந்திரங்கள் கவனம் செலுத்துவது ஏன் என்று தெரியவில்லை என்று அப்பகுதியில் உள்ள பொதுமக்களும் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகளும் தெரிவிக்கின்றனர்.

மேலும் முல்லை நகர் பகுதியில் தொடர்ந்து 2 நாட்களாக காத்திருப்பு போராட்டம் அறவழியில் நடத்தி வரும் நிலையில் அப்பகுதி மக்களுக்கு ஆதரவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை மாநகர் மாவட்டக் குழு சார்பில் மாவட்டச் செயலாளர் மா.கணேசன், மாநில குழு உறுப்பினர் இரா.விஜயராஜன், வடக்கு - 2ஆம் பகுதிக்குழு செயலாளர் ஏ.பாலு, வடக்கு -1ஆம்பகுதிக்குழு செயலாளர் வி.கோட்டைச்சாமி, மாமன்ற உறுப்பினர் டி. குமரவேல், **மக்கள் கண்காணிப்பக இயக்குநர் மூத்த வழக்கறிஞர் ஹென்றி டிபேன்,** மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட பலரும் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரித்து பேசினர்.